தலைமைச் செயலகம்,
சென்னை—9.

<u>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை</u>

<u>கடித (நிலை) எண்.4/க்யூ1/2010, நாள் 11. 01. 2010</u>

அனுப்புநர்
டாக்டர் த. பிரபாகர ராவ், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுதல்
அனைத்து செயலகத் துறைகள், சென்னை—9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்** கருணை அடிப்படையில் பணி நியமனம் நடைமுறையிலுள்ள வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்படும் ஒருங்கிணைந்த சான்றிதழ் — 'பணியிடை இறந்த அரசுப் பணியாளரை முன்னிலைப்படுத்தி' சான்று வழங்குதல் — ஆணை வெளியிடப்படுகிறது.

**பார்வை**
1. அரசு கடித (நிலை) எண். 54, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.05.2006.
2. அரசு கடித (நிலை) எண். 55, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.05.2006.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர், சென்னை—2 அவர்களது கடித எண். 15841/சி.டி.ஏ 1/2007, நாள் 07.05.2007.
4. கூடுதல் ஆணையர் வருவாய் நிர்வாகம், சென்னை—5 அவர்களது ந.க.எண். ஆ.கு.3/51442/09 நாள் 03.09.2009.

— — — — —

கருணை அடிப்படையிலான பணி நியமனம் பெற வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த சான்றிதழாகப் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, நியமனம் வழங்கிடவும், அப்பணி நியமனத்தை வரன் முறைப்படுத்திட, அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் நேர்வுகளில், 18 பத்திகளடங்கிய நிர்ணயிக்கப்பட்ட படிவத்துடன் சான்றிதழ்களை இணைத்து அனுப்பிடவும் பார்வை 1 மற்றும்

த.பி.பா.

2 இல் கண்டுள்ள அரசு கடிதங்கள் வாயிலாக ஏற்கனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர் அவர்கள், பார்வை 3 இல் கண்ட கடிதத்தில், கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் செய்யப்படும் பொழுது, வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்படும் சான்றிதழ்கள், பணியிடை இறந்த அரசுப் பணியாளரை முன்னிலைப்படுத்தி பெறப்பட்டுள்ளனவா என்பதை பெரும்பாலான துறைகள் பின்பற்றுவதில்லை என்பதால் பல தவறான முன்னுதாரணங்கள் ஏற்படுகின்றன என்றும், பணி நியமனம் செய்யப்படும் தனியர் பொருட்டு, வட்டாட்சியரால் அளிக்கப்படும் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கவை தானா என்பதற்கான அரசின் தெளிவுரையை கோரியுள்ளார். இப்பொருள் தொடர்பாக வருவாய் நிர்வாக ஆணையருடன் கலந்தாலோசித்து அரசு கவனமாக பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:—

3. கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் தொடர்பான வருவாய் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட வேண்டிய வருமானச் சான்று, வறிய நிலை சான்று, பிற வாரிசுகள் அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிகின்றார்களா என்பதற்கான சான்று, அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் தொடர்பான சான்று, காலஞ் சென்ற அரசுப் பணியாளரின் மனைவி/கணவர் மறுமணம் செய்து கொள்ளவில்லை என்பதற்கான சான்று போன்றவற்றை ஒருங்கிணைந்த சான்றிதழாக அரசு ஊழியர் பணியிடை இறந்த நாளினை அடிப்படையாக கொண்டு, பணியிடை இறந்த அரசு ஊழியரை முன்னிலைப்படுத்தி வழங்கப்பட வேண்டும் என அனைத்து வட்டாட்சியர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கிடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், பணி நியமனத்திற்கு, முன்னதாகவே வருவாய் வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்றிதழ் பெற்று ஆய்வு செய்த பின்னரே கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்கிட துறைத் தலைவர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அரசு வலியுறுத்துகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

<u>நகல்</u>

அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை—9.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை—2.
வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை—5.
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை—32.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை—9.
வருவாய்த் துறை, சென்னை—9.